இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 01-07-2024

# இந்தியாவே வழிமொழியட்டும்!

தமிழ்நாடு சட்டமன்றத்தில் உரையாற்றிய மாண்புமிகு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், ஒரு கருத்தியல் அடையாளச் சொல்லைப் பயன்படுத்தி இருந்தார். 'Dravidian Algorithm' என்ற சொல்லைப் பயன்படுத்தி இருந்தார்கள். 'நோய் நாடி, நோய் முதல் நாடி' இயக்கமாக திராவிட இயக்கம் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை அதன் மூலமாக விளக்கி இருந்தார் அமைச்சர் உதயநிதி.

**"தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையை பரப்பியதற்காக அடித்துக் கொல்லப்பட்ட உடையார்பாளையம் வேலாயுதம் தொடங்கி, நீட் தேர்வுக்குப் பலியான தங்கை அனிதா வரை கண்டது இந்த 'Dravidian Algorithm'. அதனால் தான் நீட் தேர்வு நல்லதா - கெட்டதா என ஒட்டுமொத்த நாடும் புரிந்து கொள்வதற்கு முன்பே, இந்தித் திணிப்பை நாம் ஏன் எதிர்க்க வேண்டும் என மற்ற மாநிலங்கள் புரிந்து கொள்வதற்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் புரிந்து கொண்டார்கள்" என்று ஒரு இயக்கத்தின் வரலாற்றையும் கருத்தியலையும் மிகச் சரியாக வரையறுத்துச் சொல்லி இருந்தார் மாண்புமிகு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.**

'மூத்தோர் சொல்லும் முதுநெல்லிக் கனியும் முன்னே கசந்து, பின்னே இனிக்கும்' என்பது தமிழ்ப் பழமொழிகளில் ஒன்று. 'Dravidian Algorithm' என்பதும் அப்படிப்பட்டதுதான் என்பதற்கான இக்கால எடுத்துக்காட்டு 'நீட்' தேர்வு ஆகும். **இது ஒரு மோசடித்தனமான தேர்வு என்பதை தமிழ்நாடுதான் முதலில் சொன்னது. அதனை இந்தியாவே இன்று வழிமொழிந்து கொண்டு இருக்கிறது.**

பல லட்சம் கோடி பணம் புரளும் பயிற்சி நிறுவனங்களின் நன்மைக்காக உருவாக்கப்பட்ட ஒரு தொழில்தான் இந்தத் தேர்வு என்பதை தமிழ்நாடுதான் முதலில் சொன்னது. இன்றைய தினம் மோசடி கும்பல், கும்பல் கும்பலாகக் கைது செய்யப்பட்டு வருகிறார்கள்.

**நீட் தேர்வு மோசடி தொடர்பாக குஜராத் மாநிலத்தில் கோத்ரா, அகமதாபாத், கேடா, ஆனந்த் உள்ளிட்ட 7 மாவட்டங்களில் சி.பி.ஐ. கடுமையான சோதனைகளை நடத்தி வருகிறது. குஜராத் மாநிலத்தில் கடந்த ஒருவாரமாக ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். நீட் வினாத்தாள் முறைகேட்டில் ஆசிரியர்கள், இடைத்தரகர்கள் பலருக்கும் தொடர்பு இருப்பதை சி.பி.ஐ. கண்டுபிடித்துள்ளது.**

'நீட்' தேர்வு முறைகேடு தொடர்பாக பா.ஜ.க.வின் கூட்டணிக் கட்சியான ஐக்கிய ஜனதா தளமே தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. இந்தியாவின் பெரும்பான்மை கட்சிகள் நீட் தேர்வுக்கு எதிராகக் குரல் கொடுக்கத் தொடங்கி இருக்கிறார்கள். நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இது தொடர்பாக விவாதிக்க திராவிட முன்னேற்றக் கழகம் கருத்துரு வழங்கி உள்ளது. 'நாடாளுமன்றத்தில் நீட் தொடர்பாக பேச வேண்டும்' என மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குரல் கொடுத்துள்ளார். 'நீட் தேர்வு குறித்த விவாதத்தை பிரதமர் மோடிதான் முன்னெடுக்க வேண்டும்' என்றும் ராகுல்காந்தி சொல்லி இருக்கிறார்.

**முன்னதாக தமிழ்நாடு சட்டமன்றத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்மொழிந்து நிறைவேற்றிக் காட்டி இருக்கிறார்கள்.**

**"கிராமப்புற, ஏழை எளிய மாணவர்களின் மருத்துவக்கல்வி வாய்ப்புகளை கடுமையாக பாதிக்கும் வகையிலும், பள்ளிக் கல்வியை அவசியமற்றதாக்கும் வகையிலும், மாநில மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும் உரிமையை மாநில அரசுகளிடம் இருந்து பறிக்கும் வகையிலும் அமைந்துள்ள நீட் தேர்வு முறை அகற்றப்பட வேண்டும். இந்தத் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளித்து, பள்ளிக் கல்வியில் மாணவர்கள் பெறும் 12-வது வகுப்பு மதிப்பெண்களின் அடிப்படையில் மருத்துவ மாணவர் சேர்க்கையை மேற்கொள்வதற்காக, இந்தச் சட்டமன்றப் பேரவை ஒருமனதாக நிறைவேற்றி அனுப்பிய நீட் விலக்கு சட்ட முன்வடிவிற்கு ஒன்றிய அரசு உடனடியாக ஒப்புதல் அளித்திட வேண்டுமென்றும், தொடர்ந்து பல முறைகேடுகளுக்கு வழிவகுத்து வரும் இந்தத் தேர்வு முறையை பல்வேறு மாநிலங்களும் தற்போது எதிர்த்து வரும் நிலையில், தேசிய அளவில் நீட் தேர்வு முறை கைவிடப்படும் வகையில் தேசிய மருத்துவ ஆணையச் சட்டத்தில் தேவைப்படும் திருத்தங்களை ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டுமென்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது."** - என்பதுதான் தமிழ்நாடு சட்டமன்றத்தில் கடந்த 28 ஆம் தேதியன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஆகும்.

டெல்லி, இமாச்சலப் பிரதேசம், ஜார்கண்ட், கர்நாடகா, கேரளா, பஞ்சாப், தெலங்கானா, மேற்கு வங்காளம் ஆகிய மாநில சட்டமன்றங்களிலும் நீட் தேர்வை ரத்து செய்ய ஒன்றிய அரசினை வலியுறுத்தும் வகையில் தீர்மானம் நிறைவேற்றுமாறு கோரி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்குறிப்பிட்ட மாநில முதலமைச்சர்களுக்கும் கடிதம் அனுப்பி இருக்கிறார்கள்.

அனைத்து தொழிற்கல்வி படிப்புகளுக்கும் மாணவர் சேர்க்கை மேல்நிலைத்தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில் செய்யப்படவேண்டும் என்றும் தனி நுழைவுத் தேர்வின் அடிப்படையில் மேற்கொள்ளக்கூடாது என்றும் அந்தக் கடிதங்களில் தெளிவுபட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கும் முதலமைச்சர் அவர்கள் அனுப்பி இருக்கிறார்கள். இதுதொடர்பான சட்ட முன்வடிவு மாண்புமிகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக ஏற்கெனவே அனுப்பி வைக்கப்பட்ட போதிலும், இது நாள் வரையில் அக்கோப்பு நிலுவையில் உள்ளதாக தமது கடிதத்தில் வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார். 2017 முதல் மருத்துவ மாணவர் சேர்க்கை நியாயமாக நடைபெறவில்லை. 13.9.2021 முதல் முறையும், 8.2.2022 அன்று இரண்டாவது முறையும் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நீட் விலக்கு சட்ட முன்வடிவை நிறைவேற்றி அனுப்பி இருக்கிறோம். இப்போது மீண்டும் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இப்போதுதான் நீட் மோசடியை இந்தியா முழுமையாக உணர்ந்துவருகிறது.

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் முன்மொழியப்பட்ட தீர்மானத்தை இந்தியாவே வழிமொழியட்டும். மாண்புமிகு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் அடையாளப்படுத்தப்பட்ட 'Dravidian Algorithm' இந்தியாவுக்கு வழிகாட்டட்டும்.**

## தமிழகத்தில் 7 நாட்களுக்கு மழை!

*சென்னை, ஜூலை 1-*

*தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்காலில் 7 நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது. சென்னையில் 2 நாட்களுக்கு நகரின் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. அடுத்த 5 நாட்களுக்கு தமிழ்நாடு, புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் வெப்ப நிலை 2 3 டிகிரி வரை உயர வாய்ப்பு உள்ளது.*




விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு காணை வடக்கு ஒன்றிய தேர்தல் பொறுப்பாளர் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர் மற்றும் பாக பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாநில மருத்துவரணி துணை தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் உதயசூரியன், அ.நல்லதம்பி, பெ.சு.தி.சரவணன், ஒ.ஜோதி மற்றும் எஸ்.ராஜேந்திரன், டி,கே.மோகன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ரூ. 3.12 கோடியில் நிர்வாக அனுமதி அறிவிக்கப்பட்டு - விரைவில் உசிலம்பட்டியில்

# ஆணையூர் கண்மாய்க்கு புதிய மடை கட்டும் பணி துவங்க நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் அமைச்சர் துரைமுருகன் தகவல்!

**சென்னை, ஜூன் 30-**

**சட்டப்பேரவையில் உசிலம்பட்டி தொகுதி உறுப்பினர் பி.அய்யப்பன் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த நீர்வளத்துறை அமைச்சர் துரை முருகன் அவர்கள், உசிலம்பட்டி தொகுதியில் ரூ.3.12 கோடியில் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு, ஆணையூர் கண்மாய்க்கு புதிய மடை கட்டும் பணி விரைவில் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டார்.**

இது குறித்து பேரவையில் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்ததாவது:-



மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் 58 கிராம கால்வாய் திட்டத்தின் வலது பிரிவு கால்வாய்மூலம் ஆணையூர் கண்மாய்க்கு புதிய மடை கட்டுவதற்கு ரூ.3.12 கோடிக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் விரைவில் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆணையூர் கண்மாய்க்கு தண்ணீர் செல்கிறது. எனவே, ஆணையூர் கண்மாய்க்கு 58 கால்வாயிலிருந்து நேரடியாக மடை அமைத்து தண்ணீர் வழங்குவது மாதிரிதான் போடப்பட்டிருக்கிறது, tender விடப்படும் என்று தெரிவித்திருக்கிறோம்.

இது சற்றொப்ப 30 வருடங்களுக்கு முன்னாள் தலைவர் அவர்களால் துவங்கப்பட்ட ஒரு திட்டம். உசிலம்பட்டி வட்டாரத்தில் சுமார் 58 கண்மாய்கள் வறட்சியாக இருக்கிறது. ஆனால், அது ஊடே வைகை ஓடுகிறது. எனவே, அந்த கிராமங்களுக்கு 68 அடிக்கு தண்ணீர் வருமானால், அங்கே 72 அடி வைத்திருக்கிறோம். அதுவரை தண்ணீர் வருமானால் அதற்கு பிறகுதான் இந்த 58 கால்வாய் திட்டத்தில் தண்ணீர் எடுக்க முடியும். அதை 1996ல் நாங்கள் துவங்கிவிட்டு வந்தோம். அதற்கு பிறகு அது அப்படியே போடப்பட்டது.

கருமேனியாறுக்கு என்ன கதியோ அதே கதிதான் இதற்கும் ஏற்பட்டது. ஆனால், இந்தத் திட்டத்தை தலைவர் அவர்கள் மிகவும் நேசித்தார்கள். ஏனென்றால், வறட்சியான ஒரு பகுதிக்கு தண்ணீர் கொண்டு வருவது. ஆனால், அப்படியே போய்விட்டது. மறுபடி நாங்கள் வந்தபிறகுதான் 2022 ஆம் ஆண்டில் 3 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். மறுபடியும் 4 கோடி ரூபாய், 5 கோடி ரூபாய் பணம் ஒதுக்கியிருக்கிறோம். வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதில் என்னவென்று கேட்டால், ஒரு இடத்தில கால்வாய் வெட்டிக்கொண்டு வந்தோம். சில இடங்களிலே வெட்ட முடியாத நிலை இருந்தது. உயரமான கால்வாய், பாலம் மூலம் தண்ணீர் கொண்டு வருவோம்.

கன்னியாகுமரி வில்லுகுறியில் இருப்பதை போல, வடஆற்காட்டில் மோர்தானா அணை இருப்பதைபோல பாலங்களில் அமைகிற திட்டம். அது ஒரு காட்டு வழி. எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. ராத்திரி 8 மணிக்கு அங்கு சென்று பார்த்தேன். பாம்புகளாக இருந்த ஒரு ஊர் அது. அந்த பாலங்கள் எல்லாம் இப்போதுதான் கட்டப்பட்டு வந்திருக்கிறது. எனவே, தண்ணீரை உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் எடுத்தோம் என்றால், பின்னால் பல பிரச்சினைகள் வந்துவிடும். உங்களுக்கும் தண்ணீர் வர வேண்டும். அதே நேரத்தில் கீழே இராமநாதபுரம் ஏரி நிரம்ப வேண்டும். அந்த மாதிரி கணக்கிட்டு வைத்திருக்கிறோம். கீழே இருக்கிற விவசாயிகள் பாதிக்கப்படாமல்தான் தண்ணீர் திறக்க முடியும்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் தெரிவித்தார்.

## நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய வீடுகளைப் பெற ஆதார் எண் கட்டாயம்!

*சென்னை, ஜூலை 1 -*

*தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களில் வீடுகளை பெற ஆதார் எண் கட்டாயம் என தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.*

*திமுக அரசு பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை 37 ஆயிரத்து 720 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளன. மேலும் 3 ஆயிரத்து 23 பயனாளிகளுக்கு அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான விற்பனை பத்திரங்கள் மற்றும் ஆயிரத்து 733 மேம்படுத்தப்பட்ட மனைகளுக்கும் விற்பனை பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.*

*இந்நிலையில், குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில், தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரியத்தின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களில் வீடுகளை பெற ஆதார் எண் கட்டாயம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நலத் திட்டங்களுக்காக விண்ணப்பிக்கும் முன்னதாக, ஆதார் எண்ணைப் பெற வேண்டும் என்றும், திட்டத்தை செயல்படுத்தும் துறைகள், பயனாளிகள் ஆதார் எண்ணுக்கு விண்ணப்பிக்கும் வழிமுறைகளை செய்து கொடுக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆதார் எண்ணைப் பெறும் வரை, விண்ணப்பித்ததற்கான அடையாளச் சான்று அல்லது புகைப்படத்துடன் கூடிய வங்கிப் புத்தகம், பான் அட்டை, கடவுச்சீட்டு, குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை உள்ளிட்ட சான்று ஆகியவற்றில் ஒன்றை அளிக்கலாம் என்றும் தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

லண்டன் மாநகர் - ஈஸ்ட் ஹாமில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

## தமிழ்க் கேள்வி செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது!

*லண்டன், ஜூலை 1-*

*லண்டன் மாநகர் ஈஸ்ட் ஹாமில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.*

*முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழா தமிழகத்தைத் தாண்டி உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.*

*அந்த வகையில், இங்கிலாந்து தலைநகர் லண்டனில் உள்ள ஈஸ்ட் ஹாமில் NRTIA லண்டன் மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ்ப் பண்பாட்டு மையம் சார்பில் கடந்த ஓராண்டாக தொடர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இதன் நிறைவு விழா நிகழ்ச்சி சனிக்கிழமை அன்று மாலை நடைபெற்றது.*

*NRTIA லண்டன் மற்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் தலைவர் செந்தில்குமார் இந்த நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். நிகழ்வில், மூத்த ஊடகவியலாளர் "தமிழ்க் கேள்வி" தி. செந்தில் வேல் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு அயலகத் தமிழர் வாழ்வில் கலைஞர் என்ற தலைப்பில் உரையாற்றினார். பக்தவச்சலம் நன்றி கூறினார். நிர்வாகிகள் அபுதின், வழக்கறிஞர் ராமச்சந்திரன், ராஜ்குமார், விஜய ராகவன், ஜெயராம் உள்ளிட்டோருடன் லண்டனின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.*



முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழா தமிழகத்தைத் தாண்டி உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. அந்த வகையில், இங்கிலாந்து தலைநகர் லண்டனில் உள்ள ஈஸ்ட் ஹாமில் NRTIA லண்டன் மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ்ப் பண்பாட்டு மையம் சார்பில் கடந்த ஓராண்டாக தொடர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இதன் நிறைவு விழா நிகழ்ச்சி சனிக்கிழமை அன்று மாலை நடைபெற்றது. NRTIA லண்டன் மற்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் தலைவர் செந்தில் குமார் இந்த நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். நிகழ்வில், மூத்த ஊடகவியலாளர் "தமிழ்க் கேள்வி" தி.செந்தில் வேல் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு அயலகத் தமிழர் வாழ்வில் கலைஞர் என்ற தலைப்பில் உரையாற்றினார். பக்தவச்சலம் நன்றி கூறினார். நிர்வாகிகள் அபுதின், வழக்கறிஞர் ராமச்சந்திரன், ராஜ்குமார், விஜய ராகவன், ஜெயராம் உள்ளிட்டோருடன் லண்டனின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.